[9th November 1965

(இ) விசேஷ சிறுபாசனத் திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் கிராம எல்லைகளுக்குள் ஓமலூர் கிழக்கு ஆற்றின் குறுக்காக ஓர் அணைக்கட்டு கட்டும் திட்டத்தின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

(1) திட்டச் செலவு—ஒரு லட்சத்து எண்பத்து மூன்றாயிரம் ரூபாய் (ரூ. 1.83 லட்சம்).

(2) பயனடையவிருக்கும் பரப்பளவு (ஏக்கரில்)—நூற்று எண்பது ஏக்கர் (180 ஏக்கர்).

(3) எதிர்பார்க்கப்படும் கூடுதல் உணவு உற்பத்தி. (டன்களில்) —எழுபத்தைந்து டன்கள் (75 டன்கள்).

Rice Mills

* 376 Q.—SRI M. V. KARIVENGADAM: Will the Hon. the Minister for Food be pleased to state:

(*a*) the number of applications received for the issue of licences to start rice mills from August 1964 to November 1964; and

(*b*) the number recommended to the Central Government?

THE HON. SRI V. RAMAIAH: (*a*) Two hundred and sixty-seven applications.

(*b*) As the State Government have been delegated with powers to issue permits for establishing new rice mills under the Rice Milling Industry (Regulation) Act, 1958, there was no need to recommend any case to the Central Government.

திரு. எஸ். ஜே. ராமசாமி: தலைவர் அவர்களே, மாவட்டவாரியாக எத்தனை லைசென்சுகள் இஷ்யூ பண்ணியிருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா: இந்தக் கேள்விக்கு விவரம் சேகரித்த போது வந்த புள்ளிவிவரங்களைக் கொடுக்கிறேன். அதன் பிறகு இப்பொழுது இருப்பதை விளக்குகிறேன்.

மாவட்டம்.	அப்ளிகேஷன் வந்தது.	அப்ளிகேஷன் டிஸ்போஸ் ஆனது.
(1)	(2)	(3)
சேலம்	23	23
தஞ்சை	22	5
கோவை	50	1
வட ஆர்க்காடு	30	2
கன்னியாகுமரி	15	..
நீலகிரி	1	1
தென் ஆர்க்காடு	19	2
திருச்சி	3	..
செங்கற்பட்டு	4	2
ராமநாதபுரம்	24	8
திருநெல்வேலி	33	3
மதுரை	43	14
மதராஸ்	கோரிக்கையும் வரவில்லை.	டிஸ்போஸும் செய்யவில்லை.

9th November 1965]

கனம் சபாநாயகர் அவர்களே, ரைஸ் மில் தேவை என்று கோரி ஏராளமான மனுக்கள் அரசாங்கத்திற்கு வந்து, முன்பு இருந்து வந்த முறைப்படி, மில்களுக்கு லைசென்ஸ் கொடுப்பதில் காலதாமதம் ஏற்பட்டது. சமீபத்தில், இரண்டு மாதங்களுக்கு முன்பாக அரசாங்கம் விதிமுறைகளைப் பரிசீலனை செய்து ஒரு புதுக்கொள்கையை வகுத்துக்கொண்டிருக்கிறது. இப்பொழுது இருக்கும் நிலைமைக்குத்தக்கபடி, மொத்தமாக ரைஸ் மில்லிங் இண்டஸ்ட்ரி என்று எடுத்துக்கொண்டால், இராஜ்ஜியத்தில் அரிசித் தேவைக்கு அதிகமாக மில்லிங் கபாஸிடி இண்டஸ்ட்ரிக்கு இருக்கிறது. மாவட்டங்களைப் பிரித்துப் பார்க்காமல், மொத்த மாகப் பார்த்தால், இந்த கபாஸிடி, ஒன்று இரண்டு மடங்கு கூட இல்லை, சில சந்தர்ப்பங்களில் மூன்று மடங்கு கூட அதிகமாக இருக்கிறது. ஆகையினால், இப்பொழுது அதிகமாக ப்ரொ டக்ஷன் கபாஸிடி இருக்கும் மில்களுக்குத் தேவை குறையும் போது, அதனால் நாஷனல் வேஸ்ட் ஏற்படும் என்கிற கருத்தை அரசாங்கம் ஏற்றுக்கொண்டதால், புது மில்களுக்கு ஏராளமாக நஷ்டம் உண்டுபண்ண வேண்டாம் என்று சர்க்கார் முடிவு எடுத்திருக்கிறது. ஆனாலும், சிறு விவசாயிகளுக்கும், கிராம வாசிகளுக்கும், அவர்களுடைய தேவைக்கு தொந்தரவு இல்லாத வகையில் சிறு சிறு ஹல்லர்ஸ் என்கிற சிறு மில்களை கிராம மக்க ளுடைய தேவைக்குத் தகுந்த முறையில், நெல் அரைவைக்கு, பஞ்சாயத்து எல்லைக்குள் வேறு மில்கள் இல்லாமல் இருந்தால், அங்கேயெல்லாம் தாராளமாகக் கொடுக்க அரசாங்கம் முடிவு எடுத்திருக்கிறது. இருந்தாலும், அதிக மூலதனம் செலவழித்து, மெஷின்கள் முதலியவற்றை வாங்கிப் போட்டு 4, 5 வருஷமாக அப்படியே பெண்டிங்காக இருப்பதால், ஏதேனும் அதிக நஷ்டம் ஏற்பட்டுவிடாமல் பார்த்துக்கொள்ளும் முறையில் ஒரு தேதியைக் குறிப்பிட்டு, என்னுடைய ஞாபகம் ஜூலை மாதம் ஒன்றாம் தேதி என்பது, அந்த தேதிக்கு முன்பாக வந்திருக்கும் அப்ளிகேஷன்கள் சம்பந்தப்பட்டவரையில், அதிகமாக இன்வெஸ்ட் செய்திருப்பதாக ரிப்போர்ட் இருந்தால், அதை ஸ்ட்ரிக்டாகப் பரிசீலனை செய்யாமல், கொஞ்சம் தாராளமாகப் பார்த்து, அவர்களுக்கு நஷ்டம் வராமல், லைசென்ஸ் கொடுக்க வேண்டும் என்று சொல்லு கிறோம். அதாவது, பெண்டிங் கேசுகளில் அதிகமாகப் பணம் போட்டு, ஏராளமான மூலதனம் போட்டு இருக்கும் பட்சத்தில் அந்த கேசுகளை தாராளமாகப் பார்க்கவேண்டும் என்று உத்தரவு போட்டிருக்கிறது. புதிதாக மில்களுக்கு லைசென்சு இல்லை. சிறு அரைவை மில்கள்தான் அமைக்க முடியும். அந்த வகையில் பெண்டிங் கேசுகள் அநேகமாகத் தீர்ந்து விட்டன என்று நினைக்கிறேன்.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள், 'பெண்டிங்காக இருக்கிறது' என்று கொடுத்து புள்ளி விவரம் அரசாங்கத்தினிடத்தில் வந்திருக்கிற ரைஸ்மில் அப்ளி கேஷன்கள் மட்டுமா? அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவரிடம் இன்னும் சில அப்ளிகேஷன்கள் அப்படியே இருக்கின்றனவே, அவற்றையும் சேர்த்தா? இப்பொழுது அமைச்சர் அவர்கள்

சொன்ன கொள்கை, இரண்டு மூன்று ஆண்டுகளாக மாவட்ட ஆட்சி அலுவலகத்திலே பெண்டிங்காக இருக்கிற அப்ளிகேஷன்களுக்கும் பொருந்துமா ?

கனம் திரு. வெ. ராமையா : அரசாங்கத்தின் கையில் இருந்த அப்ளிகேஷன்களைப் பொறுத்தவரையில்தான் புள்ளி விவரம் கொடுத்தேன். மாவட்ட நிலையில் அதிகமான தாமதம் ஏற்படக் காரணம் இல்லை. அப்படி இருந்தாலும் நான் சொல்லக்கூடிய புதுக் கொள்கைப்படி இந்த மனுக்கள் எல்லாம் இந்த வருஷம் ஜுலை மாதத்திற்கு முன்பே வந்திருந்து, ஏராளமான மூலதனம் போடப்பட்டதாகச் சிபார்சு இருக்கும் பட்சத்தில், அவற்றைக் கொஞ்சம் தாராளமாக, அவர்களுக்கு நஷ்டம் வந்துவிடாமல், கவனிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். புது மில்களைப் பொறுத்தவரையில், நான் இரண்டாவது சொன்ன கொள்கை தான் அனுசரிக்கப்படும்.

திருமதி டி. என். அனந்தநாயகி : அமைச்சர் அவர்கள் அளித்த பதிலிலிருந்து, டீஃபங்க்ட்டாக இருக்கும் ரைஸ் மில்களைப் பொறுத்தவரையில், முதன் முதலாக லைசென்ஸ் கொடுத்துவிட்டு, அதன் பிறகுதான் புதிய மில்களுக்குக் கொடுக்க வேண்டும் என்ற கொள்கை கட்டாயமாக அமல் நடத்தப்படுமா? கூலி ரைஸ் மில்களுக்குத் தாராளமாக லைசென்ஸ் கொடுக்க அரசாங்கம் இனியாவது முன்வருமா ?

கனம் திரு. வெ. ராமையா : டீஃபங்க்ட் மில்லா, புது மில்லா என்ற பிரச்னை அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் இல்லை. தேதி நிர்ணயம் செய்துவிட்டார்கள். ஜுலை மாதத்திற்கு முன்பு ஏராளமான மூலதனம் போட்டு அங்கிருக்கும் தேவையை மட்டும் மனத்தில் கொள்ளாமல் அவர்களுக்கு நஷ்டம் வந்துவிட்டால் அதைத் தாராளக் கண்ணோட்டத்துடன் பார்ப்பார்கள். அடுத்து, இனிமேல் புதிதாக மில் வைக்க வேண்டுமென்றால், எந்த ஒரு பஞ்சாயத்து எல்லைக்குள்ளாவது அந்த மக்களுக்குத் தேவையான நெல்லை அரைத்துக்கொள்ள வசதி இல்லையென்றால். அந்த இடத்தில் கூலி மில் வைக்கவேண்டுமானல்—வியாபார அடிப்படையில் இல்லாமல், அங்கேயிருக்கும் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய முறையில்—சிறு இயந்திரம் போட்டுக்கொள்ள அனுமதிக்கலாம் என்று அரசாங்கம் கொள்கை வகுத்திருக்கிறது.

திரு. எஸ். முருகையன் : 1959, 1960, 1961-ம் ஆண்டுகளிலே எங்களுடைய திருவண்ணாமலை நகரத்தில் 12 மில்களுக்கு மேலாக கிட்டத்தட்ட ஒரு லட்சம், ஒன்றரை லட்சம் ரூபாய் முதலீடு செய்திருந்தும் கூட, கட்டடம் கட்டி எல்லா வேலையும் முடிந்திருந்தும், ரெவின்யூ போர்டில் தள்ளுபடி செய்துவிட்டார்கள். மந்திரி அவர்களிடத்தில், ஆறு மாதங்களுக்கு முன்பே, மீண்டும் புனராலோசனை செய்ய வேண்டும் என்று மனுக் கொடுத்தும், அதையும் அமைச்சர் அவர்கள் தள்ளிவிட்டார்கள். இப்படி

9th November 1965]

கிட்டத்தட்ட ஐந்தாறு லட்ச ரூபாய் நஷ்டம் ஏற்படக் கூடிய நிலையில் பத்து பேர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அது போன்ற மில்களுக்காவது லைசென்ஸ் கொடுக்க சர்க்கார் மீண்டும் பரிசீலனை செய்யுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இப்பொழுது நான் சொன்ன அடிப்படையிலே புதுக் கோரிக்கைகள் வரும் பட்சத்தில் அரசாங்கம் கவனம் செலுத்தும்.

திரு. இராம. அரங்கண்ணல் : சிறு அரைவை மில் சம்பந்தமாக அரசாங்கம் கொண்டுவந்திருக்கிற இந்தப் புதிய முறையை நான் வரவேற்கிறேன். ஏனென்றால், ஏழெட்டு ஆண்டுகளாகவே பல பேர் பணத்தைப் போட்டுவிட்டு லைசென்சுக்காக அலைந்து கொண்டிருந்தார்கள். ஆனால், அமைச்சர் அவர்கள் தந்த தகவலில் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு மட்டும் விகிதாசாரம் அதிகமாக இருக்கிறது. மற்ற மாவட்டங்களில் குறைவாக இருக்கிறது. இதற்கு என்ன காரணம் ?

கனம் திரு. வெ. ராமைய்யா : புதுக் கொள்கைக்கு முன்பே முடிவான விவரத்தைத்தான் நான் சொன்னேன்.

திரு. கரு. சீமைச்சாமி : கைக்குத்தல் அரிசிதான் மிகவும் சத்துள்ள உணவு என்று அரசாங்கம் ஒரு புறம் சொல்கிறது. பஞ்சாயத்து யூனியன் தலைவர்களும் அவ்வாறே பிரசாரம் செய்து கொண்டிருக்கிறோம். இந்த நிலையில், மேலும், மேலும் அரிசி மில்களுக்கு லைசென்ஸ் கொடுத்துக்கொண்டு இருப்பானேன்? இனியாவது மில்களுக்கு லைசென்ஸ் கொடுக்காமலிருப்பது பற்றி அரசாங்கம் ஆலோசிக்குமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : கைக்குத்தல் அரிசி மிக நல்லது தான். ஆனால், கனம் அங்கத்தினர் திரு. சீமைச்சாமி அவர்கள் கூட பிரசாரம் செய்திருப்பாரே தவிர கைக்குத்தல் அரிசி உணவு நிச்சயமாகச் சாப்பிட்டிருக்க மாட்டார்கள் என்றே நான் நினைக்கிறேன் (சிரிப்பு). ஆனால், அவர்கள் கைக்குத்தல் அரிசி உணவு சாப்பிடுவதற்கும் ஊறு ஒன்றும் இல்லை. அதற்கும் பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. டி. கார்ச்சா கவுடர் : நீலகிரி ஜில்லாவில் கூடலூரில் நெல் விளைகிறது. அதை கூடலூரிலிருந்து மேட்டுப்பாளையத்திற்கு என்பது மைல் தூரம் கொண்டு சென்று அரைத்துக் கொண்டு திரும்பிவர வேண்டியிருக்கிறது. அதனால், கூடலூர் தாலூக்காவிலேயே ஒரு அரிசி மில் வைக்க அரசாங்கம் ஆலோசிக்குமா ? அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது ஒரு விண்ணப்பம் வந்ததாகவும், அது டிஸ்போஸ் செய்யப்பட்டிருப்பதாகவும் சொன்னார்கள். அப்படியானால், யாருக்காவது அங்கே அனுமதி வழங்கப்பட்டிருக்கிறதா ?

[9th November 1965

கனம் திரு. வெ. ராமைய்யா : 'டிஸ்போஸ்' ஆனது என்றாலும் யாருக்கும் லைசென்ஸ் கொடுத்ததாகத் தெரியாது. லைசென்ஸ் கொடுத்திருப்பார்கள் ; கொடுக்காமலும் இருந்திருப்பார்கள். என்னிடம் இருக்கும் விவரம், வந்த மனுக்களெல்லாம் டிஸ்போஸ் ஆய்விட்டன ; எதுவும் பெண்டிங்காக இல்லை என்பதுதான். இப்பொழுது நான் சொன்ன கொள்கையின் அடிப்படையில், கூடலூரில் உற்பத்தியாகும் நெல்லை அரைக்க மொத்தமாகப் பெரிய மில் வைக்க வேண்டிய அவசியமில்லை. அந்தப் பகுதியில் சிறிய இயந்திரங்களைப் போட்டு, மக்களுடைய தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய முறையில் யாரேனும் முயற்சி எடுத்தால் அது கவனிக்கப்படும்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : நெல் மிஷின் வைக்கின்ற விதத்தில் அரசாங்கத்திற்கு பண நஷ்டம் ஒன்றும் ஏற்பட்டுவிடாது. நான்கு மைல் விஸ்தீரணத்திற்குள்ளே விளைகின்ற நெல்லை அரைக்கின்ற அளவுக்கு 'கபாஸிடி' உள்ள மில்கள் இருக்கும் இடங்களில் வேண்டுமானால் புது ரைஸ் மில்களுக்கு அனுமதி கொடுக்காமல் இருக்கலாம். ஆனால், நான்கு மைல் விஸ்தீரணத்திற்குள் தேவையான மில்கள் இல்லாமல், தேவைக்குக் குறைவாக இருந்தால் அந்த இடங்களில் புது மில்கள் வைக்க யாராவது முன் வந்தால், அதை எதற்காகத் தடை செய்ய வேண்டும் ? அப்பேர்பட்ட மில் லைசென்ஸ்களைப் பொறுத்தவரையில், அரசாங்கத்தினுடைய பொறுப்பு இல்லாமல், முன்பு இருந்த மாதிரி கலெக்டரிடத்திலேயே அதிகாரத்தைக் கொடுத்து, அந்தந்த இடங்களில் இருந்தும் மனுக்களைப் புதிய கொள்கை அடிப்படையில் தீர்த்து வைக்க அரசாங்கம் ஆணையிடுமா ?

கனம் சபாநாயகர் : கனம் அங்கத்தினர் சுற்றி வளைத்து 'ஆர்க்குமென்ட்' எல்லாம் சொல்லாமல், கேள்வியாகப் போட வேண்டும்.

கனம் திரு. வெ. ராமைய்யா : ஒவ்வொரு கிராமத்திலும் இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு இந்த அரைவை சம்பந்தமாகத் தொந்தரவு வரக்கூடாது என்பதற்காகத்தான் எந்த இடத்தில் அரைவை வசதி இல்லையோ அந்த இடத்தில் சிறு கூலி மில்களை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் ஒன்றும் தடை விதிக்கவில்லை. ஆனால், கனம் அங்கத்தினர் அவர்கள், "பெரிய மில்களை ஏற்பாடு செய்வதற்கு யாரேனும் முன்வந்தால் ஏன் தடை செய்யவேண்டும் ? அரசாங்கத்திற்கு இதனால் என்ன தீங்கு வந்துவிடப் போகிறது ?" என்று கேட்டார்கள். (கனம் அங்கத்தினர் திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : இல்லை) அப்படித்தான் ஆரம்பித்தார்கள். கேள்வி. இப்பொழுது 'இல்லை' என்கிறார்கள். நான் உட்கார்ந்து கொள்ளுகிறேன்.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது 'டிஸ்போஸ்' செய்யப்பட்டது என்று சொன்னார்கள். லைசென்ஸ்கள் கொடுக்கப்பட்டு மனுக்கள் டிஸ்போஸ்

9th November 1965]

செய்யப்பட்டனவா? அல்லது, மனுக்கள் தள்ளப்பட்டு டிஸ்போஸ் செய்யப்பட்டனவா? அதனுடைய விவரம் தெரியவில்லை. எத்தனை லைசென்சுகள் வழங்கப்பட்டன என்று விவரமாக அமைச்சர் அவர்கள் சொல்வார்களா?

கனம் திரு. வெ. ராமைய்யா: கேஸ்கள் பரிசிலனை செய்து முடிவு எடுக்கப்பட்டதைத்தான் நான் சொன்னேன். இந்த டிஸ்போஸ் ஆன கேஸ்களில் எத்தனை மனுதார்களுக்குச் சாதகமாக இருந்தன, எத்தனை சாதகம் இல்லாமல் இருந்தன என்று தனியாகக் கேள்வி போட்டால், பதில் சொல்லலாம்.

திரு. டி. எல். சசிவர்ண தேவர்: ஏற்கனவே நடைபெற்றுக் கொண்டிருந்த மில்கள் நஷ்டத்தினால் மூடப்பட்டவை எத்தனை என்ற விவரம் அரசாங்கத்திற்குத் தெரியுமா?

கனம் திரு. வெ. ராமைய்யா: அது விவரம் என்னிடம் இல்லை.

உணவு தானியக் கிடங்குகள்

* 377 கேள்வி.—திரு. ப. உ. சண்முகம்: கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

தமிழ் நாட்டில் கட்ட உத்தேசித்துள்ள உணவு தானியக் கிடங்குகள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டனவா?

THE HON. SRI V. RAMAIAH: It is presumed that the hon. Member refers to the construction of godowns in Chingleput, Thanjavur and Tiruchirappalli districts undertaken by this Government on an agency basis on behalf of the Central Warehousing Corporation. The construction of these godowns has been completed and the ancilliary work like construction of administrative block, quarters for watchmen, isolation sheds, formation of roads, etc., are in various stages of progress.

திரு. ப. உ. சண்முகம்: திட்டமிட்டபடி இந்தக் கிடங்குகள் எத்தனை காலத்திற்குள்ளாகக் கட்டி முடிக்கப்பட வேண்டும்? எத்தனை காலத்திற்குள் கட்டி முடிக்கப்பட்டது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா: இதை அவசர கால வேலையாக எடுத்துக்கொண்டு இதுபோன்ற மற்ற கட்டடங்களைக் கட்டுவதற்கு எவ்வளவு காலம் ஆகுமோ அதைவிட மிகக் குறுகிய காலத்திலேயே கட்டி முடித்திருக்கிறார்கள்.

திரு. இரா. நெடுஞ்செழியன்: கனம் அமைச்சர் அவர்கள் இந்த மூன்று கிடங்குகளும் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன என்று அறிவித்தார்கள். இந்த மூன்று கிடங்குகளுக்கும் மொத்தமாகச் செலவாகியுள்ள தொகை எவ்வளவு?